Deposition of witness
(Chapter XXIII code of Criminal Procedure)
In the court of Judicial Magistrate No.I, Tindivanam.

**CASE NO.CC. 149/2024 PW-4**

Name : கலைமணி
Father / Husband name : மாரிமுத்து
Village : ரோசணை
Age : 52
Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 this day 07.02.2026

Accused present. Both side counsel present.

**முதல் விசாரணை**

நான் தற்போது ரோசணை காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளர் பணி செய்கிறேன். கடந்த 29.06.2023 அன்று காலை 10 மணிக்கு நான் ஒலக்கூர் காவல் நிலையத்தில் பணியிலிருந்த போது அ.சா.1 அமுல்தாஸ் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று நிலைய குற்ற எண் 158/2023, U/s. 279,304(A) IPC ன் படி வழக்கு பதிவு செய்து இதன் அசல் வாதியின் அசல் புகாருடன் இணைத்து கனம் நீதிமனத்திற்கு அனுப்பி வைத்தேன். இதர நகல்களை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் அனுப்பிவைத்தேன். வழக்கு கோப்பினை ஆய்வாளரின் பார்வைக்கு வைத்தேன். இந்த வழக்கு சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசரித்தார்கள். **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

புகாரில் சம்பவத்தை யார் நேரில் பார்த்தார்கள் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். விபத்தில் இறந்தவர் 70 வயதுக்கு

மேல் இருககுகம் நபர் என்றால் சரிதான். சென்னை தேசியநெடுஞ்சாலையை கடக்கும்போது விபத்து நடந்ததாக புகாரில் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரியல்ல, சாலையை கடந்து நடந்துவந்தபோது விபத்து ஏற்பட்டதாக சொல்லப்பட்டுள்ளது.

/ திறந்த நீதி மன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அதை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்பு அவருக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டவுடன் என் முன்பாக கையொப்பமிட்டார்//

நீதித்துறை நடுவர் எண். 1 , திண்டிவனம்.